## மூன்றாம் கூடுதல் மாவட்ட/அமர்வு நீதிமன்றம், சேலம்

**முன்னிலை - திரு.வே.புகழேந்தி, இளநிலைச் சட்டம்,**
**மாவட்ட நீதிபதி**

**2026–ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 12–ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**திருவள்ளுவர் ஆண்டு 2057 வைகாசித் திங்கள் 29–ஆம் நாள்**

**முதலேற்பு வழக்கு எண். 125/2016 –ல்**
**வழக்கிடை விண்ணப்ப எண் 04/2026**

**K. பாக்கியம் ...மனுதாரர்/07–ஆம் பிரதிவாதி**

**–எதிர்–**

**01. G. ஜெயா (இறந்தார்)**
**02. K. கோவிந்தன்**
**03. S.சாரதா**
**04. P. தேவகி**
**05. S.ஆனந்தி .....எதிர்மனுதாரர்கள்/வாதிகள்/**

இந்த மனுவில் மனுதாரருக்காக வழக்குரைஞர் **திரு.V. மணிவண்ணன்** அவர்களும் 02 முதல் 05 வரையிலான எதிர்மனுதாரர்களுக்காக வழக்குரைஞர் **திரு.K.M.ஜெயபால்** அவர்கள் தோன்றினர். 01-ஆம் எதிர்மனுதாரர் இறந்துவிட்ட நிலையில் இந்த மனு இறுதி விசாரணைக்கு வந்தபோது இரு தரப்பிலும் முன்வைத்த வாதங்களை கவனத்தில் வைத்தும் வழக்குக் கோப்புகளை பரிசீலித்தும் இந் நாள்வரை நிலுவையிலிருந்த இந்த மனுவில் இன்று இந் நீதிமன்றம் ஆணை பிறப்பிக்கிறது.

### ஆணையுரை

**முகவுரை**

எதிர்வழக்குரையுடன் தாக்கல்செய்யப்படா ஆவணங்களை மனுதாரர்/07-ஆம் பிரதிவாதி தரப்பு சாட்சியத்தின்போது முன்னிடுவதற்கு அனுமதி வழங்கக் கோரி உரிமையியல் நடைமுறைத் தொகுப்புச் சட்டத்தின் 08-ஆம் வகுமுறையின் 1A(3)-ஆம் விதியின்கீழ் இந்த மனு தாக்கல்செய்யப் பட்டுள்ளது.

III rd ADJ Court, Salem

## மனுவின் சுருக்கம்

01. மனுதார் முதலேற்பு வழக்கில் 07-ஆம் பிரதிவாதி ஆவார். எதிர்மனுதாரர்கள்/வாதிகள் பாகப்பிரிவினை கோரியும் இதர நிவாரணங்கள் கோரியும் முதலேற்பு வழக்கைத் தொடுத்துள்ளனர்.

02. இந்த வழக்கு பிரதிவாதி தரப்பு சாட்சியத்திற்காக உள்ளது. மனுதாரர்/07-ஆம் பிரதிவாதி எதிர்மனுதாரர்கள்/வாதிகளுக்கு எதிராக முதலேற்பு வழக்கு எண் 270/2018 என்ற வழக்கைத் தொடுத்துள்ளனர். அந்த வழக்கில் வாதி தரப்பு சான்றாவணங்களை தன் தரப்பு வாதங்களுக்கு ஆதரவான ஆவணங்களை தாக்கல்செய்துள்ளார். அந்த ஆவணங்களின் சான்றிட்ட நகல்களை பெற்று இந்த வழக்கில் தற்போது தாக்கல்செய்துள்ளார். அந்த ஆவணங்கள் இந்த வழக்கை அறுதியாக முடிவுசெய்ய அவசியமாக உள்ளன. ஆகையால், அந்த ஆவணங்களை தற்போது முன்னிட அனுமதி அளிக்க வேண்டும்,

## எதிருரையின் சுருக்கம்

03. இந்த மனுவுடன் முன்னிடப்பட்டுள்ள 31 ஆவணங்கள் இந்த வழக்கிலுள்ள பிரச்சனையை முடிவுசெய்ய எவ்விதத்திலும் தொடர்பற்றவை. ஆகையால், இந்த மனுவைத் தள்ளுபடிச் செய்ய வேண்டும்.

## தீர்வுகாண வேண்டிய விவாதக்கூறுகள்

**04. இந்த மனு அனுமதிக்கத்தக்கதா?**

**தீர்முடிவு**

05. இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டன. வழக்குக் கோப்புகள் ஓர்வுசெய்யப்பட்டன. எதிர்மனுதாரர்கள்/வாதிகள் பாகப்பிரிவினை கோரியும் இதர நிவாரணங்கள் கோரியும் 01 முதல் 07 வரையிலான பிரதிவாதிகளுக்கு எதிராக முதலேற்பு வழக்கைத் தொடுத்துள்ளனர். 01 முதல் 06 வரையிலான பிரதிவாதிகள் தோன்றாத் தரப்பினராக உள்ளனர். 07-ஆம் பிரதிவாதியான மனுதாரர் மட்டும் வாதிகளின் வழக்கை எதிர்த்து நடத்துகிறார். இந்த வழக்கின் 07-ஆம் பிரதிவாதி இந்த வழக்கின் பிரதிவாதிகளுக்கு எதிராகவும் மேலும் சில நபர்களுக்கு எதிராகவும் தொடுத்த முதலேற்பு வழக்கு எண் 270/2018 இந் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. இரு வழக்குகளும் சேர்ந்திணையாக விசாரிக்கப்படுகின்றன.

06. இந்த மனுவுடன் தாக்கல்செய்யப்பட்டுள்ள 31 ஆவணங்களும் உரிமைமூல, அனுபோகம் சம்மந்தமான ஆவணங்களாக உள்ளன. இந்த ஆவணங்கள் சம்மந்தமான சாட்டுரைகள் மனுதாரரின் எதிர்வழக்குரையில் உள்ளது. மேற்சொன்ன ஆவணங்கள் அனைத்தும் நீதிமன்ற சான்றிட்ட நகல்களாக உள்ளன. இந்த ஆவணங்களை தற்போது இந்த வழக்கில் சான்றாகப் பெற்றுக்கொள்ள அனுதிப்பதால் எதிர்மனுதாரர்கள்/வாதிகளுக்கு எவ்வித அநீதியும் விளையாது. மேற்சொன்ன ஆவணங்கள் இந்த வழக்கை அறுதியாக முடிவுசெய்ய தொடர்புடையன என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

III rd ADJ Court, Salem

**இறுதிமுடிவு**

07. இறுதியாக, இந்த மனு அனுமதிக்கப்படுகிறது.

**இந்த ஆணையுரை என்னால் சுருக்கெழுத்துத் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சுச் செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026 ஆம் ஆண்டு ஜூன்திங்கள் 12–ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.**

PUGAZHENTHI V Digitally signed by PUGAZHENTHI V
Date: 2026.06.12 18:35:18 +0530

**மூன்றாம் கூடுதல் மாவட்ட/அமர்வு நீதிபதி,**

**சேலம்.**

III rd ADJ Court, Salem